©
GOVERNMENT OF TAMIL NADU
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 46A] சென்னை, வியாழக்கிழமை, பிப்ரவரி 15, 2024
மாசி 3, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2055

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| | | பக்கங்கள் |
|---|---|---|
| சட்டமுன்வடிவுகள்: | | |
| எண். 3/2024—தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். | .. | 2–4 |
| எண். 4/2024—தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. | .. | 5–6 |



DTP—Ex-IV-1 (46A)

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2024

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

111 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 111 ஆம் பிரிவின், (j) கூறுக்குப் பிறகு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 21/1994.

“(k) குடியிருப்பவர் அல்லது குழுவாக குடியிருப்பவர்கள், நலிந்த பிரிவினர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக, அவ்வப்போது, அரசால் உருவாக்கப்படலாகும் அரசு திட்டங்களுக்குக் கூடுதலாக வீட்டுவசதி, ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் குடும்ப நல நடவடிக்கைகளை வகைசெய்வதன் மூலமாக அவர்களுக்கு தகுந்த பணியை மேற்கொள்ளுதல் அல்லது தேவையான சேவையை வழங்குதல்.”.

112 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 112 ஆம் பிரிவில், –

(1) (n) கூறில், "மற்றும்" என்ற சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) அத்தகையவாறு திருத்தம் செய்யப்பெற்ற (n) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“(nn) குடியிருப்பவர் அல்லது குழுவாக குடியிருப்பவர்கள், நலிந்த பிரிவினர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக, அவ்வப்போது, அரசால் உருவாக்கப்படலாகும் அரசு திட்டங்களுக்குக் கூடுதலாக வீட்டுவசதி, ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் குடும்ப நல நடவடிக்கைகளை வகைசெய்வதன் மூலமாக அவர்களுக்கு தகுந்த பணியை மேற்கொள்ளுதல் அல்லது தேவையான சேவையை வழங்குதல்; மற்றும்”.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

ஊராட்சிகள் வழக்கமான கட்டமைப்பிலிருந்து, வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும், வாழ்வாதாரத்தை எளிதாக்கும், வறுமையை போக்குவதற்கும், கல்வியறிவின்மையை அகற்றுவதற்கும் குடியிருப்பவரின் வாழ்க்கைத் தேவைகளின் மேம்பட்ட தரத்திற்கு உண்மையான ஒருங்கிணைப்பை உறுதி செய்யும் நிறுவனமாக மாற்றப்பட வேண்டும். இந்த பத்தாண்டானது நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்கல் அடைதலில் அதிக கவனம் செலுத்துகிறது. இந்த செயல்பாட்டுத் திட்டத்தை செலுத்துவதில் ஊராட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

2. அரசமைப்பின் 243–G ஆம் உறுப்பின் (b) கூறானது சுயாட்சி நிறுவனங்களாக செயல்படுவதை இயலச்செய்ய தேவைப்படலாகும் அத்தகைய அதிகாரங்களையும், ஆணையுரிமையையும் ஊராட்சிகளுக்கு வழங்க சட்டத்தின் மூலம் மாநில சட்டமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. அரசமைப்பின் பதினொன்றாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்பாடுகள் தொடர்புடையவை உள்ளடங்கலாக பொருளாதார மேம்பாடு மற்றும் சமூகநீதிக்கான திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பாக பொருத்தமான அளவில் ஊராட்சிகளுக்கு அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஒப்படைப்பதற்கான வகைமுறைகளை அத்தகைய சட்டங்கள் கொண்டிருக்கலாம். கூறப்பட்ட பதினொன்றாவது அட்டவணையானது ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படக்கூடிய இருபத்து ஒன்பது செயற்பணிகளை பட்டியலிடுகின்றது. அரசமைப்பில் கூறப்பட்டுள்ள பதினொன்றாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள செயற்பணிகளை திறம்பட கையாள ஊராட்சிகளுக்கு அதிகாரமளிப்பதற்கும் தற்போதைய தேவைகளுக்கு இணங்கலாக துடிப்பாகவும், திறம்பட செயல்படவும் ஊராட்சிகளால் செய்யப்பட வேண்டிய சில கூடுதல் செயற்பணிகளை குறிப்பிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்கியவாறு, வாழ்வாதார மேம்பாடு மற்றும் நிலையான வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருப்பதால் தமிழ்நாடு அரசு, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 111 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினையும் 112 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினையும் இந்த நோக்கத்திற்காக தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்கண்ட முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 15.

**கி. சீனிவாசன்,**
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2024**

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

239 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின், 239 ஆம் பிரிவின், (2) ஆம் உட்பிரிவில், (b) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(b) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையாளரானவர் தாம் பதவியேற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளைக் கொண்டதொரு கால அளவுக்கு அல்லது அறுபத்து ஐந்து வயது எய்தும் வரையில், இவற்றில் எது முந்தையதோ அது வரையில் பதவியில் இருத்தல் வேண்டும் மற்றும் அவர் மறுபணியமர்த்தத்திற்கு தகுதியுடையவர் ஆகார்."

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 239 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (b) கூறின்படி, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையரின் பதவிக்காலம் இரண்டாண்டுகளாகும் மற்றும் இரண்டு தொடர்ச்சியான கால அளவுகளுக்கு அவர் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராவார். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் மொத்தத்தில் ஆறாண்டுகளுக்கு பதவி வகிக்கலாம், ஆனால் அவர்தம் பதவிக்கால அளவின்போது அறுபத்து ஐந்து வயதினை நிறைவெய்தினால், அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

2. இந்தியாவிலுள்ள பெரும்பாலான மாநிலங்களில், மாநில தேர்தல் ஆணையர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் அல்லது அறுபத்தைந்து வயது வரை, இவற்றில் எது முந்தையதோ அதுவரை என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநில தேர்தல் ஆணையத்தின் அமைப்பு மற்றும் தொடர்புடைய பொருட்பாடுகளை வலுப்படுத்துவதற்கான, சிறப்பு பணிப்பிரிவானது, 2011 ஆம் ஆண்டில், மாநில தேர்தல் ஆணையரின் பதவிக் காலமானது ஐந்து/ஆறு ஆண்டுகள் அல்லது அறுபத்தைந்து வயது வரை; இவற்றில் எது முந்தையதோ அது வரையில் இருக்கவும் நீட்டிப்புக்கான வகைமுறை எதுவும் இல்லாமல் இருக்கவும் பரிந்துரைத்துள்ளது. கூறப்பட்ட பரிந்துரை இந்திய அரசின், ஊராட்சி அமைச்சகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, அரசானது, இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ள மாநிலத் தேர்தல் ஆணையரின் பணி நிபந்தனைகளுக்கு இணங்கிய முறையில், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 21/1994) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்கண்ட முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2024 பிப்ரவரி 15.

**கி. சீனிவாசன்**,
*முதன்மைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.